Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு வைகாசி மீ 26 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 11 (09 – 06 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 166

# யாழ் நிலைமை குறித்து மத்திய அமைச்சர்கள் தமிழ்நாடு அரசுடன் ஆராய்வு

## கோயமுத்தூரில் இருந்து எம். ஜி. ஆர். சென்னை விரைவு

சென்னை, ஜூன் 9

**ஸ்ரீ லங்கா அரசு யாழ் குடாநாட்டில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை மேற்கொண்டுவருவது குறித்து மத்திய அமைச்சர்கள் இருவர் தமிழக அரசுடன் ஆராய்ந்தனர்.**

**இதற்கென விசேடமாக சென்னை வந்த மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங், இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் ஆகியோர் தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரனுடன் பேச்சுக்களை நடத்தினர்.**

இந்த பேச்சுக்களின் விளைவை அறிவதற்காக கோயம்புத்தூரிலிருந்து முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும், நிதி அமைச்சர் திரு. நெடுஞ்செழியனும் சென்னை விரைந்திருந்தனர்.

பெங்களூரில் இருந்து வந்த திரு. பூட்டாசிங் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனுடன் நீண்ட நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுக்கள் முடிந்ததும் திரு. பூட்டாசிங்கும், திரு. சிதம்பரமும் உடனடியாக புதுடில்லி விரைந்தனர்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பான வழிமுறைகள் இப்பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

பாதிக்கப் பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, சனம் என்னத்துக்கு உப்பிடி இடம் மாறுதுகள் எண்டு தெரியயில்லை. போற இடத்திலை இஞ்சை இருக்கிற ஆபத்து வராது எண்டு என்ன உத்தரவாதம்...?

## அகதியான அதிகாரி!

யாழ்ப்பாணம், ஜூன் 9

அகதிகளுக்கு புனர்வாழ்வு உதவி வழங்குவதற்குப் பொறுப்பான யாழ் மாவட்ட அதிகாரி ஒருவரும் அகதியாகியுள்ளார்.

இதனால் அகதிகளுக்கான நிவாரண வேலைகள் தடைப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு அமைச்சின் யாழ் மாவட்டத் தொடர்பு அதிகாரியான திரு. ரி. இராஜநாயகமே இவ்வாறு அகதியாகியுள்ளார். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். (உ–ள)

## பலாலியில் பாரிய ராணுவ தளம்?

யாழ்ப்பாணம், ஜூன் 9

பலாலி விமானத்தளத்தைபாரிய இராணுவத் தளமாக விஸ்தரிப்பதற்கு ஸ்ரீ லங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு முன்னேற்பாடாக பலாலி கடற்கரை ஓரமாக உள்ள பல கிராமங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப் பகுதியில் இருந்து பொது மக்கள் விரட்டப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ–10)

## முள்ளி முகாம் சிப்பாய்களால் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 9

முள்ளி மினி இராணுவ முகாம் முன்பாகச் சென்ற பயணிகள் பஸ்ஒன்றைச் சோதனையிட்ட சிப்பாய்கள் பெண் ஒருவரையும் ஆண் ஒருவரையும் கைது செய்தனர் என்று கூறப்படுகின்றது.

நேற்றுக் காலை 10 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

வடமராட்சிப் பகுதியை நோக்கி பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்த போது இவர்கள் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டனர். (இ–10)

## இலங்கை தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 9

அகில இந்திய வித்தியா பரிஷத் மாணவர்கள் நேற்று சென்னையில் உள்ள இலங்கைத் துணை ஹைகமிஷனர் அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்களை விலக்கிக் கொள்ளவேண்டும் என்றும்—

அரசியல் பேச்சுக்களை நடத்தி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்—இந்திய அரசைக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இலங்கைத் தூதரக அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (இ–ள)

## பிரபா தமிழகம் திரும்பிய செய்திக்கு புலிகள் மறுப்பு

சென்னை, ஜூன் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் இன்னமும் யாழ்ப்பாணத்தில் தான் தங்கியிருக்கிறார்.

இப்படி இயக்கத்தின் சார்பில் சென்னையில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

திரு. பிரபாகரன் இந்தியா திரும்பிவிட்டார் என்று தமிழகப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி ஆதாரமற்றது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

–இப்படி இந்திய வானொலி மேலும் அறிவித்தது. (உ–எ)

## புனித கிரேஸா வித்தியாலய விடுதி மாணவிகள் படையினரால் தடுப்பு?

அச்சுவேலி, ஜூன் 9

அச்சுவேலி புனித திரேஸா மகளிர் வித்தியாலய விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா? — இப்படி அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி புனித திரேஸா மகளிர் மாணவிகள் விடுதியில் வெளி மாவட்ட மாணவிகள் உட்பட பல மாணவிகள் தங்கி இருந்து கல்வி பயின்று வந்தனர்.

தற்பொழுது இராணுவத்தினர் இக் கல்லூரி உட்பட அதனை அண்டியுள்ள சில கட்டடங்களில் தங்கியிருப்பதால்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## காயம் அடையும் சிப்பாய்களால் அரசுக்கு தலையிடியாம்

காயமடைந்த சிப்பாய்களால் அரசுக்கு பெரும் தலையிடி என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தம்மைச் சந்தித்த தமிழ் உயர் அரச அதிகாரி ஒருவரிடம் தெரிவித்தாராம்.

காயமடையும் சகல சிப்பாய்களும் கொழும்புக்கு அனுப்பப்படுவதில்லை. இவர்களால் சிங்கள மக்கள் திசைதிருப்பப்படலாம் என்பதே இதற்குக் காரணம்.

இதனால் கைவிரல்கள் இழந்தவர்கள் கொழும்புக்கும்; கை, கால்கள் இழந்தவர்கள் நேரடியாக பாகிஸ்தானுக்கும் அனுப்பப் படுகின்றார்கள் என்றும் அந்த இராணுவ உயர் அதிகாரி கூறினாராம். (இ–ள)

## சேந்தான்குளத்தில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

சேந்தான்குளப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிப்பாய்கள் குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஷெல் தாக்குதல்களால் பெருந்தொகையான வீடுகள் சேதமடைந்தன.

வீரசிங்கம் லலிதாதேவி (வயது 20) எனும் இளம் பெண் ஒருவர் ஷெல் தாக்குதலின் போது காயமடைந்தார். (உ–ள–10)

## டிக்ஸிற் வீட்டின் முன் ஆர்ப்பாட்டப் பேரணி

### இன்று நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 9

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே, என். டிக்ஸிற்றின் வாசஸ்தலத்துக்கு முன்னால் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த பௌத்த பிக்குமார் திட்டமிட்டிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டுத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்களை இந்தியா விமானம் மூலம் தரையிறக்கியதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது. (உ)

## விமானத் தாக்குதல் வீடியோ படத்தில்

யாழ் குடாநாடு மீது இலங்கை அரசு நடத்திய தாக்குதல்களை விளக்கமாகக் காட்டும் வீடியோப் படம் ஒன்று புதுடில்லியில் பத்திரிகையாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

விமானத் தாக்குதல்களினால் பல வீடுகள், கடைகள், மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவையும் ஆஸ்பத்திரியும் பலத்த சேதமுற்றிருந்தமை இந்தப் படத்தில் தெளிவாகத் தெரிந்ததாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## தெல்லிப்பளையில் நேற்று தொடர்ந்து மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இரண்டாவது நாளாக நேற்றுத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதியில் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சமர் நடைபெற்றது.

போராளிகளின் தாக்குதலால் காங்கேசன் துறையில் இருந்து நேரடியாக தெல்லிப்பளை வரை வரமுடியாத இராணுவத்தினர் —

கீரிமலை, சேந்தான்குளம் ஊடாக நீண்ட நடைபவனி ஒன்றை மேற்கொண்டு கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மாவிட்டபுரத்திற்குச் சுற்றி வந்து சேர்ந்தனர்.

பலாலி முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய்கள் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கருகில் உள்ள கொத்தியாவெளி சுடலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தாக்குதல் மட்டுநகரில் நேற்று 7 தமிழர்கள் கொலை

கொழும்பு, ஜூன் 9

மட்டக்களப்பு நகரில் ஆயுத படையினர் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் 7 தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ரோந்து சென்ற ஆயுதப் படையினர்மீது கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து படையினர் இத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. பொது மக்கள் பலர் தாக்கப்பட்டனர். இச் சம்பவத்தில் 4 பேர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் ஐவர் கிரனேட் தாக்குதலினால் உயிரிழந்தனர் என அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

## குடாநாட்டிலிருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

பெரும் எண்ணிக்கையான மக்கள் குடாநாட்டை விட்டு வெளி இடங்களுக்கு இடம் பெயர ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக தினமும் ஆயிரக் கணக்கானோர் படகுகளில் அகதிகளாக தமிழகம் நோக்கியும் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

மற்றொரு பகுதியினர் குடா நாட்டை விட்டு கிளிநொச்சி, மற்றும் வன்னி, கொழும்புப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தவண்ணம் இருக்கின்றனர்.

குடா நாட்டின் மீது ஸ்ரீ லங்கா அரச படையினர் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சியே மக்கள் குடா நாட்டை விட்டு வெளியேறி வருகிறார்கள். (உ–10)

## இந்திய அறிவிப்பை இலங்கை நிராகரித்தது

புதுடில்லி, ஜூன் 9

இனப் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா தயார் என இந்திய அரசு விடுத்த அறிவிப்பை இலங்கை பொருட்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் அடுத்த வாரம் நடைபெறும் தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புக் கூட்டத்தின் போது இதுபற்றிப் பேசலாம் என இந்தியா அறிவித்திருந்தது.

ஆனால் இந்த மாநாட்டில் இலங்கை அமைச்சர்கள் எவரும் கலந்துகொள்ளப்போவதில்லை என்று இந்திய அரசுக்கு தற்போது தகவல் கிடைத்திருக்கிறது.

இது இந்தியாவின் பேச்சுவார்த்தை பற்றிய அறிவிப்பை இலங்கை பொருட்படுத்தவில்லை என்பதையே எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் இந்தியா நிவாரணப் பொருள்களைத் தரையிறக்கிய பின்னர் கூட, அதன் தாக்கத்தை உணராது இலங்கை அரசு தொடர்ந்து இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருவது இந்தியாவுக்கு மேலும் கவலையளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## செஞ்சிலுவை அவதானிகளை குடாநாட்டுக்கு அனுப்புமாறு அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அகதிகள் பிரச்சினை கட்டுமீறி உள்ளது. கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு உதவுவதாக இல்லை.

எனவே செஞ்சிலுவைச் சங்க அவதானிகள் குழு ஒன்றைக் குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதுடன், எமது மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவ்வாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவுக்கு தமிழ்ப் பகுதி பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள அவசர வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் மத்தியில் பீதியும், உயிருக்கு என்ன நடக்குமோ என்ற அச்சமும் நிலவுகிறது.

குடாநாட்டில் உள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருத்தில் கொண்டு பெரும் எண்ணிக்கையா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09–06–1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:–
10.22முதல் 11.52 வரை
ராகுகாலம்:–
2.52 முதல் 4.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
வைகாசி விசாகம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில்

# மக்கள் படிப்படியாக வீடு திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடமராட்சிப் பகுதியில் கடந்த 26-ஆம்திகதி முதல் நடைபெற்ற அனர்த்தங்களால் இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் மெல்லமெல்ல தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர்.

வடமராட்சிப் பகுதியை நேரில் பார்வையிட்டுவந்த யாழ் பெற்றோர் சங்கச் செயலாளர் சட்டத்தரணி சி. பொன்னையா இதனைத் தெரிவித்தார்.

கடந்த 5, 6, 7ஆம் திகதிகளில் வடமராட்சிப்பகுதியைச் சுற்றிப் பார்த்ததுடன் அப்பகுதி மக்களின் கஷ்ட நிலையையும் அவர் கேட்டறிந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

கடந்த 3ஆம் திகதி முதல் மக்கள் வீடுகளுக்குத் திரும்பி வருகின்ற போதிலும் அவர்களுக்கு அரிசி, காய்கறி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காததனால் அவர்கள் பெரும் பட்டினி நிலையை எதிர்நோக்குகின்றனர்.

## பல இடங்களில் கடை உடைப்பு; பொருள்கள் அபகரிப்பு

700 அந்தர் உணவை அரசாங்கம் அனுப்பியதாக அறிந்தேன். அது உங்களுக்குக் கிடைத்ததா என நான் அப்பகுதி மக்களிடம் வினவியபோது அப்படி எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பகுதியில் பல கடைகள் உடைக்கப்பட்டு உணவுப் பொருள்கள் அபசரிக்கப்பட்டுள்ளன. சில கடைகள் பூட்டப்பட்டுள்ளன.

இங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விமானக் குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்டுள்ளன. சந்தை ஒன்றும் இயங்கவில்லை.

இதனால் இங்குள்ள மக்கள் ஒருவேளைக் கஞ்சியுடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

விமான பீப்பாய்க் குண்டு வீச்சின் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள் எரித்து நாசப்படுத்தப்பட்டுள்ளன.

வடமராட்சி மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்காவிட்டால் அவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-7)

# கப்பலிலிருந்து மூடை இறக்கும் இளைஞர்கள்


யாழ்ப்பாணம், ஜூன் 9

வடமராட்சிப் பகுதியில் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் காங்கேசன் துறைமுகத்தில் மூடைகளை இறக்கும் வேலையில் அமர்த்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

காங்கேசன் துறைமுகத்துக்கு கடந்த சில வாரங்களாக ஊழியர்கள் கடமைக்குச் செல்வதில்லை.

இதனால் கப்பலில் வரும் உணவுப் பொருள்கள் இறக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

இதனை அடுத்தே நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களை இராணுவத்தினர் இந்த வேலைகளில் ஈடுபடுத்தினர் என்று கூறப்படுகிறது. (இ-10)





கடந்த மாதம் 26 ஆம் திகதிக்குப்பின்னர் நடைபெற்ற விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல்களில் மானிப்பாய் வீதியில் உள்ள பல கடைகள் எரிந்திருப்பதை மேலேயுள்ள படத்திலும், சத்திரத்துச்சந்தியில் மண்ணுடன் சங்கமித்த கடைக்கட்டடங்கள் சிலவற்றைக் கீழே உள்ள படத்திலும் காணலாம்—

படங்கள்:- சண். ஜோண்சன்.

கடற்கரையில் 900 இளைஞர்வரை இருந்தோம்

# அரிசி, கிடாரம் தந்து சமைக்கச் சொன்னார்கள்

## தும்பளை வாசியின் நான்குநாள் அனுபவம்

— வல்வைச் செய்தியாளர் —

...வட்டித்துறை, ஜூன்9

கடற்கரையில் சுமார் 900 இளைஞர்களுடன் என்னையும் இருத்திவிட்டு கிடாரம், அரிசி ஆகியவற்றைத் தந்து இராணுவத்தினர் எம்மைச் சமைக்கச் சொன்னார்கள்.

நாம் சமைக்கத் தொடங்கி சிறிது நேரத்தில அரிசி அவிய முன்னரேயே இறக்கச் சொல்லி எம்மை அதை உண்ண வைத்தனர்.

இவ்வாறு பருத்தித்துறை இராணுவ முகாமில் நான்கு நாள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்ட எஸ். எஸ். நாதன் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

24 வயதுடைய தும்பளை வாசியான இவர் தனது சோகக்கதையை பின்வருமாறு விவரித்தார்.

நானும் எனது குடும்பமும் கடந்த மாத 26 ஆம் திகதி வானொலியில் அறிவிக்கப்பட்டது போல் புற்றளை அம்மன் கோவிலில் தஞ்சம் அடைந்தோம்.

அடுத்த நாள் காலை 10 மணி அளவில் திடீரென வந்த இராணுவத்தினர் 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களைக் கைது செய்தனர்.

தாய்மார், சகோதரிகள் கதறி அழுவதையும் பொருட்படுத்தாது அவர்கள் எம்மைப் பருத்தித்துறை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

முகாமுக்கு அருகில் உள்ள கடற்கரைக்கு எம்மைக் கொண்டு சென்று அங்கேயே மூன்று நாட்களும் தங்க வைத்தனர்.

நாம் அந்த அவியாத சோற்றை உண்டபோது எமக்கு விக்கல்எடுத்தது.

அப்பொழுது கூட எமக்குக் குடிக்கத் தண்ணீர் தரவில்லை.

மறுநாள் இராணுவ அதிகாரியின் அனுமதியுடன் காலைக்கடன்களை கழிக்கச் சென்ற எம்மை இடையில் வந்த இராணுவத்தினர் எஸ்லோன் பைப்பால் தாக்கினர்.

நாம் ஓடி வந்து அதிகாரியிடம் முறையிட்டோம்.

அவர் இராணுவத்தினரைக் சண்டித்துவிட்டுச் செல்ல மீண்டும் அவர்கள் எங்களைச் சப்பாத்துக் கால்களால் தாக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

காத்தான்குடி ஊர்காவலர்

# துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டன

மட்டக்களப்பு, ஜூன் 9

காத்தான்குடி ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளில் ஒரு பகுதி பொலிஸாரால் மீளப் பெறப்பட்டுள்ளது.

ஊர்காவல்படை பொறுப்பதிகாரியின் அலுவலகத்துக்கு வந்த பொலிஸார் மேலிட உத்தரவின் கீழ் துப்பாக்கிகளை சோதனையிடப் போவதாகக் கூறி மீளப் பெற்றுச் சென்றனர்.

அதேநேரம் எம்.பி.க்களின் விஷேட சிபார்சில் ஊர்காவல் படையினர் சிலரின் தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி துப்பாக்கி வைத்திருக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களின் துப்பாக்கிகள் மீளப் பெற்றுக்கொள்ளப் படவில்லை. (இ-21)

அகதியாக வெளியேறியபோது

# நடுக் காட்டில் குழந்தை பிரசவித்த கர்ப்பிணிப் பெண்

முள்ளியவளை, ஜூன்9

மோட்டோர் ஷெல், மற்றும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களினால் நாம் ஆழியவளையில் இருந்து கால்நடையாக அம்பலவன் பொக்கணைக்கு வரும்போது எம்முடன் வந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் நடுக்காட்டில் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

ஆழியவளையில் இருந்து இராணுவத் தாக்குதல்களுக்கு அஞ்சி அகதிகளாக அம்பலவன் பொக்கணைக்கு வந்துள்ள திருமதி ஆரோக்கியநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

கடந்த மாதம் 30 ஆம் திகதி எமது பகுதியை பொம்மர்களும் ஹெலியும் வட்டமிட்டுச் சிறிது நேரத்தில் ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் எமது கிராமத்தை நோக்கி ஏவப்பட்டன.

நாம் உடுத்த உடுப்புக்களுடன் கடற்கரைக்கு ஓடினோம்.

அங்கு எம்மைப்போல ஓடிவந்த சுமார் 150 பேர் நின்றனர்.

அங்கும் எம்மை ஷெல் பீரங்கித் தாக்குதல்கள் விடவில்லை.

பகலில் நடக்கப் பயந்து இரவில் மட்டும் நடந்தோம்.

பசியால் வாடிய குழந்தைகளுக்கும், வயோதிபர்களுக்கும் பாலைப்பழம் பறித்துக் கொடுத்தோம்.

கடுங்குளிரினால் எம்முடன் வந்த ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று இறந்தது.

அதை அங்கேயே புதைத்து விட்டு இங்கு வந்து சேர்ந்தோம்.

இப்படி அவர் கூறினார். (இ-93)

## மந்துவிலில் அச்சுவேலி அகதிகள்

கொடிகாமம், ஜூன் 9

இராணுவத் தாக்குதல்களினால் உடைமைகள், சொத்து சுதந்திரம் இழந்து நூற்றுக் கணக்கானமக்கள் அகதிகளாக தென்மராட்சியின் ஒரு கிராமமான மந்துவிற் கிராமத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

அச்சுவேலி, இடைக்காடு, வளலாய், சுதிரிப்பாய், தம்பாலைக் கிராம மக்களே அழுத கண்ணீரும் கம்பலையுமாக இங்கு அகதிகளாக வந்தடைந்தனர்.

மந்துவில் றே. க. பாடசாலையில் இருநூறு பேரும் பாரதி வித்தியாலயத்தில் இருநூறு பேருமாக நாநூறு பேர் அகதிகளாக வந்தடைந்துள்ளனர். (அ-75)

மரணமானோர் குடும்பத்துக்கு

# மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்க நிதியிலிருந்து உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் வன்முறை காரணமாக அகால மரணம் அடையும் பட்சத்தில் மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்க நிதியில் இருந்து தலா ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி மரணமான 88 பேரின் குடும்பங்களுக்கு 88 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பணம் மாநகரசபை நிதியிலிருந்து வழங்கப்படவில்லை என்றும் மாநகரசபை ஊழியர்களது ஊதியத்தில் இருந்து பெறப்படும் நிதியில் இருந்தே வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இராணுவத் தாக்குதலினால் குருநகரில் கொல்லப்பட்ட ஆறு பேரின் குடும்பங்களுக்கும் பாரதி வீதியைச் சேர்ந்த ஒருவரது குடும்பத்துக்குமாக மொத்தம் ரூபா ஏழாயிரம் இந் நிதியிலிருந்து மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்தால் வழங்கப்பட்டுள்ளது. (இ)

## சந்தியில் 'சென்றி'

மட்டக்களப்பு, ஜூன் 9

மட்டக்களப்பு நகர் அலங்கரிப்பிற்காக அமைக்கப்பட்ட 'டவுண்டர் போர்ட்டில்' ஆயுத படையினரின் பதுங்கு குழி அமைக்கப்பட்டு அது சென்றியாக மாற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலக சந்தியிலுள்ள 'டவுண்டர் போர்ட்' தான் சென்றியாக மாற்றப்பட்டுள்ளது,

# மட்டக்களப்பு பாதுகாப்பு ஒரே இணைப்பதிகாரி கீழ்

மட்டக்களப்பு, ஜூன்9

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒரே இணைப்பதிகாரியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படலாமெனத் தெரிய வருகிறது.

இதன்படி அம்பாறை பொலன்னறுவை இணைப்பதிகாரிகளின் கீழ் இயங்கும் இராணுவ முகாம்கள் நீக்கப்பட்டு அம்முகாம்களுக்குப் பதிலாக மட்டக்களப்பு இணைப்பதிகாரியின் கீழ் விசேஷ அதிரடிப்படை முகாம்கள் நிறுவப்படலாம் என்று கூறப்படுகிறது.

முதற்கட்டமாக தற்போது அம்பாறை இணைப்பதிகாரியின் கீழ் இயங்கி வந்த புல்லுமலை இராணுவ முகாம் அகற்றப்பட்டு தற்போது மட்டக்களப்பு இணைப்பதிகாரியின் கீழ் விசேஷ அதிரடிப்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொலன்னறுவை இணைப்பதிகாரியின் கீழ் இயங்கும் மான்கேணி, வாகரை, சுதிரவெளி, வாகனேரி முகாம்களும் இவ்வாறு மாற்றப்படலாமெனக் கூறப்படுகிறது.

புணானை இராணுவ முகாமைப் பொறுத்தவரை இம்மாற்றம் ஏற்படமாட்டாது.

இம் மாவட்டத்திலுள்ள விசேஷ அதிரடிப்படைமுகாம்கள் எண்ணிக்கை 15 என்பது குறிப்பிடத்தக்கது. (இ-21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## அச்சுவேலியில் பொதுமக்கள் சிலர் மினி முகாமில்?

யாழ்ப்பாணம், ஜூன்9

அச்சுவேலிப் பகுதியிலுள்ள கோவில்களில் தஞ்சம் புகுந்திருந்த சில பொதுமக்களை சிப்பாய்கள் தம்முடன் மினி முகாமில் வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

புனித சூசையப்பர் ஆலயம், அம்மன் கோவில், பிள்ளையார் கோவில் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்களை புனித திரேசான் மகாவித்தியாலய மினிமுகாமில் சிப்பாய்கள் தம்முடன் தங்க வைத்துள்ளனர்.

இப்படித் தங்க வைக்கப்பட்டோரில் பெரும் பாலானோர் பெண்களும் நோயாளிகளும் வயோதிபர்களுமே என்று கூறப்படுகிறது. (இ-ள)

மக்கள் முகம்

### மண்டைதீவுகிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ஜெயகுணதிலகம், செயலாளர்: திரு. வி. மாணிக்கவாசகர், பொருளாளர்: திரு. ச. தனபாலசிங்கம், உபதலைவர்கள்: திரு. க. இராசநாயகம், திரு. அ. ஸ்ரீபத்மராஜா, உப செயலாளர்: திரு. எஸ். ஏ. சோமசுந்தரம், கணக்குப் பதிவாளர்: திரு. அ. ஸ்ரீரவீந்திரராஜா; நிர்வாகசபை உறுப்பினர்கள்: திரு. திரு. வீ. சோமசுந்தரம், திரு. க. யோகநாதன், திரு. கு. இரத்தினலிங்கம், திரு. இ. கனகநாதன், திரு. வி. ஸ்ரீரங்கநாதன், திரு. த. தர்மகுலேந்திரன், திரு. வெ. கெங்காதரன். (இ)

### மிளகாய், புகையிலை செய்கைகள் வடக்கில் பாதிப்பு

பண்டத்தரிப்பு, ஜூன்9

சமீபத்தில் பெய்த மழையால் வடபகுதியில் மிளகாய், புகையிலை, வெங்காயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-120)

## போராடவேண்டிய காலம் வந்துவிட்டது —பிரதமர்

கொழும்பு, ஜூன் 9

இலங்கை மீண்டும் ஒரு குடியேற்ற நாடாக மாறுமல் இருக்க நாம் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது.

பிரதமர் பிரேமதாச இப்படிச் சொன்னார்.

திஸ்ஸமஹரகமவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ் வேண்டுகோளை அவர் விடுத்தார்.

...மைக்குப் பங்கம் ஏற்படாமல் புத்த பிரானின் ஆசி பாதுகாக்கும் என்றும் பிரதமர் சொன்னார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா பேசுகையில் தீவிரவாதிகளுக்கு இன்னொரு நாட்டில் உதவி அளிக்கப்படும் போது, தீவிரவாதத்தை ஒழிப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்றார். (இ-எ)

## முல்லைத்தீவில் உள்ள திருமலை அகதிகளுக்கு "நோருட்" உதவி

முள்ளியவளை, ஜூன் 9

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவினில் தங்கியுள்ள அகதிகளுக்கு நோருட் தொண்டர் நிறுவனம் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தினூடாக நிவாரண நிதிஉதவிகளை வழங்கியுள்ளது.

இந்தப் புனர்வாழ்வு உதவித் திட்டங்களுக்கான நிதி உதவிகள் திருமலை ஆய்வுஅபிவிருத்திக் கழகத்தினூடாகவே திருமலை மாவட்ட இடம் பெயர்ந்தோர் ஐக்கிய சங்கம் மூலமாக விநியோகிக்கப்பட்டன.

8 குடும்பங்களுக்கு 750 ரூபா வீதம் புனர்வாழ்வு திட்ட நிதிஉதவியும்—

இரு குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான சூடை வலைகளும்—,

இரு குடும்பங்களுக்கு தொழில் வசதிக்காக சைக்கிள், சிகை அலங்காரத் தொழில் நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கடலூர், சல்லி கிராமங்களைச் சேர்ந்த 75 மீனவ குடும்பங்களுக்கும், தென்னமரவாடி, கும்புறுபிட்டியைச் சேர்ந்த 45 மீனவ குடும்பங்களுக்கும் வீச்சு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. (இ-ள-93)

## சைவ மகாஜன மாணவர், ஆசிரியர் அகதிகளுக்கு உதவி

மானிப்பாய், ஜூன் 9

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் அகதிகளுக்கு உணவு, உடை போன்ற பொருள்களைச் சேகரித்து வழங்கினர்.

சேகரிக்கப்பட்ட பொருள்களை இவர்கள் பாடசாலை அதிபர் திரு. ரி. திருநாவுக்கரசுமூலம் சுன்னாகம் பிரசைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகரிடம் கையளித்தனர்.

பொருள்களைப் பெற்றுக்கொண்ட திரு. தி. மாணிக்கவாசகர், நெருக்கடி மிகுந்த வேளையில் மாணவர் ஆசிரியர்களின் இதுபோன்ற பணி மிகவும் போற்றுதற்குரியது.

இவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களும் இதுபோன்ற பணிகளில் ஈடுபடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (இ-90)

### பாராட்டுவிழா

மானிப்பாய், ஜூன் 9

சுன்னாகம் உப அலுவலக மின்சார ஊழியர்களான திரு. சா. சித்திரவேலு, திரு. இரத்தினசிங்கம், திரு. சிவலிங்கம் ஆகியோர் மின்கம்பி இடுபவர் சகாவாகப் பதவி உயர்வுபெற்று இடமாற்றம் பெற்றனர். இதனைப் பாராட்டி சுன்னாகம் மின்சாரசபை ஊழியர்களாலும், உப அலுவலக ஊழியர்களாலும் விழா ஒன்று நடத்தப்பட்டது. (இ-90)

### முதுமாணிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

மீசாலையைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் கணேசலிங்கம் அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றார். [இ]

★★★★★★★★★★
வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க
★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கீழ்ப்படியப் பழகினவர் கட்டளையிட வல்லவராவர்.

— சுவாமி சிவானந்தர்

உதயன்

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

9.6.1987 த.பெ.இல: – 23

# வேகமும் விவேகமும் வேண்டும் வேளையிது

ஒருவன் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட இருப்பதை அறிந்து, அதனைத் தடுக்க உதவுமாறு அடுத்தவனிடம் கேட்கிறான்.

உயிருக்குப் போராடுபவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தால் அவனைக் காப்பாற்ற முடியும் என்பது அடுத்தவனுக்குப் புரிகிறது.

எனினும் அவனது கடைசி வேண்டுதலை அடுத்தவன் தனது காதில் போட்டுக்கொள்ளாமல், தூரப்போய் விடுவானானால் உயிருக்குப் போராடியவன் இறந்தே போவான்!

ஈழத் தமிழ் மக்கள் உயிருக்குப் போராடுபவன் நிலையிலும், உலக நாட்டு மக்கள் அடுத்தவனாகவும் இருக்கிறார்கள்.

ஈழத் தமிழர்கள் தமது கடைசி நேர வேண்டுகோளை உலக மக்களுக்கு இப்போது விடுத்திருக்கிறார்கள்.

இராணுவப் படுகொலைகள் மூலம் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் செயலைத் தடுத்து நிறுத்தி எங்களைக் காப்பாற்றுங்கள்.

இவ்வாறு தமிழ் மக்கள் தம்மை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு உலக மக்களைக் கேட்டிருக்கிறார்கள். மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் இந்த வேண்டுதலை உத்தியோக பூர்வமாக உலக நாடுகளுக்கு விடுத்திருக்கிறது.

இந்தக் கடைசி நேரத்திலேனும் தமிழர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்த உலக நாடுகள் பின்னிற்குமாயின் உயிர்ப் பிச்சை கேட்பவனை உதைத்து உயிர்போக்கிய பாவம் அவற்றைச் சென்றடையும்.

உலகத்தில் சிறுபான்மை இனங்கள் வாழ முடியாது; வாழக் கூடாது என்று உலக நாடுகள் உறுதி செய்ததாயும் போய்விடும்.

சமாதானத்தையும் சகவாழ்வையும் விரும்பும் நாடுகள் மக்கள் மீதான சாதாரண இராணுவத் தாக்குதல்களையே ஒப்புவதில்லை. ஆனால் தமிழ் மக்கள் இவ்வேளை பூண்டோடு அழிக்கப்படுகிறார்கள். அதனை நிறுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்த முடியாதெனின் உலக நாடுகள் கண்மூடித் தூங்குகின்றன என்பதே அர்த்தமாகும்.

தமிழ் மக்கள் உலக நாடுகளுக்கு இப்போது விடுத்துள்ள கோரிக்கையை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பத்து நாட்களுக்கு முன்னரே விடுத்திருந்தார்.

இராணுவத் தீர்வை நாடியுள்ள ஸ்ரீலங்கா அரசாங்கத்தை, யாழ்ப்பாணக் குடா நாடு மீதான தாக்குதலை நிறுத்துமாறு வற்புறுத்துமாறு உலக நாடுகளிடம் திரு. காந்தி கேட்டிருந்தார்

அந்தக் கோரிக்கை குறித்து உலகநாடு எதுவும் செவிசாய்த்ததாக இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

உலகின் வல்லரசுகளான அமெரிக்காவோ, ரஷ்யாவோ மற்றும் பிரிட்டன், ஜெர்மனி போன்ற சக்தி வாய்ந்த நாடுகளோ அல்லது சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற அயல் நாடுகளோ யாழ்ப்பாணம் மீதான இராணுவத் தாக்குதல்களை— தமிழர்களைப் பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகளை— நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் காத்திரமாக வலியுறுத்தியதாகச் செய்தி இல்லை.

எனவே ஈழத் தமிழ் மக்களின் கடைசி நேர, உயிர்ப் பிச்சைக் கோரிக்கை, உலக நாடுகளின் செவிகளில் விழும் என்று நம்புவதற்கில்லை. அந்த நாடுகள் யாவும் கண்ணிருந்தும் குருடர்களாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எது எப்படியோ, யாழ் குடா நாட்டு மக்கள் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்துமாறு ஸ்ரீலங்காவிடம், மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் முழுப் பொறுப்பும் இப்போது இந்தியாவையே சார்ந்து உள்ளது.

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது வழக்கு வாசகம். ஈழத் தமிழரைக் காப்பாற்றுவதற்காக தனது சிரமத்தையும் பெருமையையும் பாராது இந்தியாவானது ஸ்ரீலங்கா அரசைக் காத்திரமாகத் தொடர்ந்தும் வற்புறுத்த வேண்டும்.

தமது வற்புறுத்தல் வேகமாக விளைவைத் தரக்கூடியதாக அது விவேகத்துடன் இயங்க வேண்டும்.

## உச்சிமாநாடு சாத்தியம்

வாஷிங்டன், ஜூன் 8

அமெரிக்க அதிபர் றேகன்—ரஷ்ய அதிபர் கோர்பச்சேவ் உச்சி மாநாடு வாஷிங்டனில் அக்டோபரில் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் உருவாகியுள்ளன.

பெரும்பாலும் இந்த ஆண்டுக்குள் நடுத்தர ஏவுகணை ஆயுதக் குறைப்பு சம்பந்தமான உடன்படிக்கை ஒன்று உருவாகும் சாத்தியமும் அதிகரித்திருப்பதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் வில்லியம் பேக்கர் தெரிவித்தார். (இ–எ)

# சீன - இந்திய பேச்சு மீண்டும் அடுத்தமாதம்

## சீன உதவி வெளியுறவு அமைச்சர் தகவல்

கல்கத்தா, ஜூன் 8

சீன – இந்திய எல்லைப் பேச்சுக்கள் மீண்டும் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன

புதுடில்லியில் இப்பேச்சுக்கள் நடைபெறும். அதற்கான திகதிகளை இரு நாடுகளும் கூடிப் பேசித் தீர்மானிக்கும்.

சீன உதவி வெளியுறவு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பூட்டான் செல்லும் வழியில் சீன அமைச்சர் கல்கத்தா விமான நிலையத்தில் சிறிது நேரம் தரித்து நின்றார்.

அப்போது செய்தியாளர்கள் அவரைச் சந்தித்தனர்.

அச்சமயமே அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார்.

''சீன – இந்திய எல்லையில் துருப்புக்கள் குவிக்கப்படுவதாக மேற்கு நாட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகள் தவறானவை. இராணுவ ரீதியில் எல்லைத் தகராறைத் தீர்க்கும் எண்ணம் சீனாவுக்குக் கிடையாது'' இப்படி சீன அமைச்சர் மேலும் சொன்னார். (இ–எ)

### பாக்-ஆப்கான் எல்லைப் புறத்தில் குண்டு வெடிப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 8

பாகிஸ்தானின் ஆப்கான் எல்லைப் புறத்தில் பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்படுகிறது.

எல்லைப்புற நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மூன்று பொலிஸார் உயிரிழந்தனர்.

பெஷாவாரில் உள்ள ரயில் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். (இ-எ)

பிஜி முன்னாள் பிரதமர்

## பவித்திராவை சந்திப்பதற்கு மகாராணி மறுப்பு

லண்டன், ஜூன் 8

பிஜியின் முன்னாள் பிரதமர் டாக்டர் பவித்ராவைச் சந்திக்க எலிஸபெத் மகாராணியார் மறுத்துவிட்டார்.

பிஜியின் மகாதேசாதிபதியுடன் தொடர்பு கொண்ட பின்னரே பக்கிங்ஹாம் அரண்மனை இந்த மறுப்பை நேற்று வெளியிட்டது.

இருந்தும் மகாராணியாரின் தனிப்பட்ட செயலாளரைச் சந்தித்துப் பேசுவதற்கு டாக்டர் பவித்திராவுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

பிஜியின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் பவித்திரா, பதவி ஏற்ற சில வாரங்களில் இராணுவப் புரட்சி ஒன்றைத் தொடர்ந்து பதவி கவிழ்க்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

பிஜியில் மீண்டும் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வருவதற்கு பிரிட்டனின் உதவியை நாடுவதே டாக்டர் பவித்திராவின் லண்டன் விஜயத்தின் நோக்கமாகும். (இ–எ)

## எம். ஜி. ஆரின் பொறுப்புகள் சில பண்ருட்டி இராமச்சந்திரனிடம்

சென்னை, ஜூன் 8

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தனது அதிகாரங்கள் பலவற்றை உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுக்குப் பாரப்படுத்தி இருக்கிறார்.

வேலைப்பளுவைக் குறைத்து கோப்புகளை பரிசீலனை செய்வதைத் துரிதப்படுத்தும் முகமாகவே இந்த அதிகாரங்கள் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கு, அகில இந்திய ரீதியான கருமங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் கவனிப்பார்.

மற்ற விஷயங்கள் அனைத்தும் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உயர் கொள்கை சம்பந்தமான விஷயங்கள் தொடர்ந்தும் முதலமைச்சரிடம் தான் இருக்கும். (இ–எ)

### வெனிஸில் உச்சிமாநாடு

ரோம்' ஜூன் 9

ஏழு கைத்தொழில் நாடுகளின் உச்சிமாநாடு இன்று செவ்வாய் வெனிஸ் நகரில் ஆரம்பமாகின்றது.

அமெரிக்கா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

மாநாடு மூன்று தினங்கள் நடைபெறும். (இ–எ)

## வைத்தியசாலையை தரம் உயர்த்துவதை எதிர்த்துப் போராட்டம்

ஈரோடு, ஜூன் 8

அரசு வைத்தியசாலையைத் தரம் உயர்த்தக் கூடாது என்று கிராம மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

கிராமத்துக்குள் பஸ்களை நுழைய விடாது தடுத்து இப்போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் நாட்டில் பெரியார் மாவட்டத்தில் உள்ள திங்களூர் என்ற கிராமத்து மக்களே இப் போராட்டத்தை நடத்தினர்.

வைத்தியசாலையைத் தரம் உயர்த்தினால் குடும்பக்கட்டுப்பாட்டுச் சிகிச்சையில் மட்டுமே டாக்டர், ஊழியர்கள் அக்கறை செலுத்துவர். கிராம மக்களின் சுகாதாரம் குறித்து கவனம் செலுத்த மாட்டார்கள்''— என்பதே போராட்டத்துக்கான காரணம் என்று மக்கள் அறிவித்தனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து வைத்தியசாலை தரம் உயர்த்தப்படுவது நிறுத்தப்பட்டது. (இ-எ)

**வெளி உலகில்**

### ஈரானுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 8

வளைகுடாவில் ஏவுகணைகளை நிறுவுவது குறித்து ஈரானுக்கு அமெரிக்கா தொடர்ந்து எச்சரிக்கை செய்துவருகின்றது.

இப்படி வெள்ளை மாளிகைப் பேச்சாளர் பேக்கர் தெரிவித்தார்.

சீனாவின் தயாரிப்பான ஏவுகணைகளை வளைகுடாவில் ஈரான் ஸ்தாபிப்பது மிகவும் பயங்கரமான விளையாட்டாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ–எ)

சீஷெல்ஸில்

## இந்துக்கோயில்

சீஷெல்ஸ் நாட்டில் முதன்முதலாக ஓர் இந்துக்கோயில் கட்ட தற்போது திட்டமிடப்படுகிறது.

தற்போது வாடகைக்குப் பெறப்பட்டுள்ள கட்டடத்தில் வழிபாடு செய்யப்படும் விநாயகர், நடராஜர் சிலைகள் இப் புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்.

இப்புதிய கோயிலை நிர்மாணிக்க தமிழ்நாடு அரசில் பொருளுதவி கோரப்பட்டு உள்ளது.

இப்பணியை மேற்கொள்ளவும், இந்திய—சீஷெல்ஸ் உறவினை வலுவுறச் செய்யவும் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு உள்ளது.

இந்திய முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இக் கமிட்டியின் தலைவராவார். (இ–க)

# திருமலை, மன்னாரிலுமிருந்து தரைமார்க்க நடவடிக்கை

## 48 மணி நேரத்தில் காரியம் கைகூடுமாம்

இறுதியானதும் கடுமையானதுமான நடவடிக்கை இராணுவ ரீதியிலானது.

தரைமார்க்கமான இக் கூட்டு ஆயுத நடவடிக்கை இரண்டு கோணத் தாக்குதலாக இருக்கும்.

ஒன்று, மன்னாரின் ஓர் இடத்தில் இருந்து இடம் பெறும்.

இரண்டாவது திருகோணமலையின் ஒரு முனையில் இருந்து ஆரம்பமாகும்.

**துண்டிப்பு**

இதன் மூலம் வடபகுதியில் உள்ள இராணுவத் தொடர்புகள் துண்டிக்கப்படும். பின்னர் தமிழருக்குப் பாதுகாப்பு வழங்கப்படும்.

தரையிலும், கடலிலும் செல்லும் படைப் பிரிவு ஒன்றை அனுப்புவதன் மூலம் இதைச் செய்ய முடியும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பாவிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட விமான ஓடுபாதைகளை விமான படைப் பிரிவு பயன்படுத்த முடியும்.

இந்த நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக இலங்கை விமானப் படையை செயலிழக்கச் செய்யவேண்டும்.

இந்தியத் தாக்குதலைச் சமாளிக்கக் கூடியதாக இலங்கை விமானப்படை இல்லை.

48 மணித்தியாலத்தில் எண்ணத்தை நிறைவேற்றக் கூடியதாக இந்தியாவின் இராணுவ நடவடிக்கை அமையும்.

இலங்கைத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் [illegible] விடுத்த அறிக்கையின்படி இலங்கை இராணுவத்தின் பலம் தமிழ்ப் போராளிகளிலும் பார்க்க 10:1 ஆக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிர போராளிகள் ஆயிரம் பேர் வரையும் இரண்டாம் நிலைப் போராளிகள் 2,000 பேர் வரையுமே உள்ளனர் என்று அமைச்சர் கூறுகின்றார். இலங்கை ஆயுதப் படையில் 30 ஆயிரம் பேர் உள்ளனர்.

நிரந்தரப்படையில் 13 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையும், தொண்டர் படையில் அதே எண்ணிக்கையும் உண்டு.

ரைபிள், கைத் துப்பாக்கி வழங்கப்பட்ட 15 ஆயிரம் பரா இராணுவத் துருப்புக்களும் உள்ளனர்.

இலங்கைப் படைகள் ஐந்து அதிரடிப் பிரிவுகளாக உள்ளன. இவை இந்தியப் படை அணிகளுக்குச் சமமானவை.

4 ஆயிரம் பேர் கொண்ட விசேஷ அதிரடிப்படைப் பிரிவும் உண்டு. பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ். இஸ்ரவேல் ஷின்பெத் படையினரால் இவர்கள் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்.

பொதுவாக இந்த விசேஷ அதிரடிப் படையினரில் அரைவாசிப்பேர் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரையான வேறு படையினருடன் கிழக்கு மாகாணத்தில் பணியாற்றுகின்றனர். (வளரும்)

''இந்தியாவின் இராணுவத் தெரிவுகள்'' — என்ற தலைப்பில் 'இந்து' பத்திரிகையின்மே30இதழில் ஒருசெய்திக் கட்டுரை வெளியாகியது.

இச்செய்திக் கட்டுரையை 'இந்துவின்' புதுடில்லிச் செய்தியாளர் எழுதியிருந்தார்.

அதன் ஒரு முதல் பகுதி நேற்றுப் பிரசுரமாகிஇருந்தது. இரண்டாம்பகுதி இன்று பிரசுரமாகிறது.

### ஊர்வலம் திருப்பி அனுப்பப்பட்டது

திருகோணமலை, ஜூன் 9

ஊர்வலமாக மூதூரை நோக்கி வந்த மக்களை ஆயுதப் படையினர் இடையில் வழிமறித்துத் திருப்பி அனுப்பி வைத்தனர்.

கூனித்தீவு, சேனையூர், சம்பூர், கட்டைபறிச்சான் ஆகியகிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களே பெரும் எண்ணிக்கையில் மூதூருக்கு ஊர்வலமாக கடந்தவாரம் வந்தனர்.

கட்டைபறிச்சானில் வைத்துப் பாதுகாப்புப் படையினர் இவர்களை வழிமறித்து சொந்த இடங்களுக்குச் செல்லும்படி திருப்பி அனுப்பி வைத்தனர். (இ–எ–150)

### என்றுமில்லாத நெருக்கடியில் இலங்கை

கொழும்பு, ஜூன் 9

இலங்கை என்றும் இல்லாத நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த நேரத்தில் அனைவரும் கட்சி பேதமின்றி நாட்டுக்காகப் போராட முன்வர வேண்டும்.

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## இந்தியாவின் கவலை நியாயமானதே

### லண்டன் நாளிதழ் கருத்து

லண்டன், ஜூன் 8

யுத்தம் புரிந்த சீனா, பாகிஸ்தான் நாடுகளுடன் இலங்கையின் உறவு வளர்ச்சி அடைந்து வருவது குறித்து இந்திய அரசு கவலை அடைவதில் நியாயம் இருக்கிறது.

—இப்படி லண்டன் 'இன்டிபென்டென்ற்' நாளிதழ் இம்மாதம் 4 ஆம் திகதிய தனது தலையங்கத்தில் சுட்டிக் காட்டி இருக்கிறது.

பாக்கு நீரிணைப் பகுதம் குறித்து சனியன்றும் லண்டன் பத்திரிகைகள் சில ஆசிரியர் தலையங்கம் எழுதின.

''மத்தியஸ்த முயற்சிகள் தோல்வியடைந்ததினால் ஏற்பட்ட விரக்தி காரணமாக இந்திய அரசு நிவாரண உதவிகளை வழங்க முயற்சி எடுத்தது நியாயமானதே.

எப்படி இருப்பினும் இரண்டு நாடுகளுக்கும் இடையே ஆயுதமோதல் ஏற்படக்கூடிய அளவுக்கு பிரச்சினையை வளர்ப்பது புத்திசாலித்தனம் அல்ல''

—இப்படி லண்டன் 'கார்டியன்' நாளிதழ் எழுதியது, (உ-எ)

## தீர்வு காணாவிட்டால் நிலைமை கட்டுமீறும்

### இலங்கைக்கு எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 9

இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு உடனடித்தீர்வு காணாவிட்டால் நிலைமை கட்டுமீறிப் போய்விடும்.

—இப்படி அகில இந்திய இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவு எச்சரித்துள்ளது.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவுத் தொண்டர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆனந்தசர்மா உட்பட பல இந்திரா காங்கிரஸ் எம்பிக்களும் பேசினர்.

அப்போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (உ–எ)

### கிளிநொச்சி கொத்தணி அதிபர்

கிளிநொச்சி, ஜூன் 9

கிளிநொச்சி கொத்தணி அதிபராக கடமையாற்றிய திரு. இரா. சின்னத்தம்பி கடந்த ஜனவரி மாதம் முதல் நெடுந்தீவுக்கு இடமாற்றப் பட்ட பின் இவரது இடத்துக்கு அதிபர். திரு. என்.சோதிநாதன் பதில் கடமையாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ–76)



**பொய்யாமொழி**

**குறள்:**

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

**பொருள் :**

தனக்குப் பொருந்தும் செயலையும் அதற்காக அறியவேண்டியதையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கின்றவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

09 06 1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

### காங்கேசனில் இராணுவ நடமாட்டம் நீடித்தால்

# குடாநாட்டு மக்களை பட்டினியிலிருந்து எவராலும் காப்பாற்ற முடியாது

## உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி கூறுகிறார்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூன் 9

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியப் பகுதியில் இராணுவ நடமாட்டம் தொடர்ந்தும் இருக்குமானால், யாழ் குடாநாட்டு மக்களை பட்டினி நிலையில் இருந்து எவராலும் காப்பாற்ற முடியாது. அங்கு இராணுவ நடமாட்டம் இருக்கும் வரை வேலைக்குச் செல்வதில்லை என தொழிலாளர்கள் தெரிவித்துள்ளதே இதற்குக் காரணம்.

— இவ்வாறு யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் தெரிவித்தார்.

பொருளாதாரச் சிறப்புப் பட்டதாரியும், 5வருடங்கள் திருமலை உதவி அரச அதிபராகவும் கடமையாற்றிய இவர், 15 வருடங்களாக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக கடமை புரிந்துவருகின்றார். அவர் மேலும் கூறியதாவது:-

எனது 15 வருட சேவைக் காலத்தில் எந்த ஒரு மாவட்டமும் யாழ் மாவட்டம்போல் இந்த வகையில் புறக்கணிக்கப்பட்டு கஷ்டங்களை எதிர்நோக்கவில்லை.

யாழ் மாவட்ட மக்கள் மிக மோசமான உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்கியுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு மா இல்லை.

காங்கேசன்துறைக்கு கடைசியாக கடந்த ஏப்பிரல் மாதம் 17 ஆம் திகதியே கப்பல் வந்தது.

தற்போது ஆயிரத்து 327 தொன் மாவும் 4 ஆயிரத்து 500 தொன் அரிசியும் களஞ்சியத்தில் இருக்கின்றன.

இவற்றை மக்களுக்கு விநியோகிக்க முடியாது உள்ளது. தொழிலாளர்கள் வேலைக்கு வர அஞ்சுகின்றனர்.

அவர்களது பாதுகாப்புக்கு எவராலும் உத்தரவாதம் அளிக்கமுடியாதுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். (உ-ள)

## கல்வித் திணைக்கள காசோலைகள் திரும்பின

அச்சுவேலி, ஜூன் 9

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சுன்னாகம் இலங்கை வங்கி காசோலைகள் வங்கிக் கணக்கில் கையிருப்புப் பணம் இல்லாததால் வாடிக்கையாளர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன.

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மே மாதச் சம்பளத்திற்கான காசோலைகளே வங்கியால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் தமது சம்பளக் காசோலையை பிறரிடம் ஒப்படைத்துவிட்டு பணம் பெற்றனர். இப்பொழுது வங்கி கணக்கில் பணம் இல்லாமல் காசோலைகள் திரும்பி வருவதால்- இந்த இக்கட்டான வேளையில்- ஆசிரியர்கள் எதிர்பாராத சிக்கலுக்கு உள்ளாகி சிரமப்படுகின்றனர். (உ-11)

## திருவிளக்கு பூஜை

யாழ்ப்பாணம், ஜூன் 9

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வட்டுக்கோட்டை சங்கரத்தை கரந்தை குளவத்தை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலில் இரண்டாவது திருவிளக்குப் பூஜை நடைபெறும்.

நாளை மறுநாள் வியாழக்கிழமை ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்மன் ஆலயத்தில் 23 ஆவது தீபலட்சுமி (சுமங்கலி) பூஜை இடம்பெறும். (இ-எ)

## கொல்வின் நாடு திரும்பினார்

கொழும்பு, ஜூன் 9

வைத்திய சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கடந்த வியாழன் கொழும்பு திரும்பினார்.

மே தினத்தன்று நடந்த கண்ணீர்ப்புகைக் குண்டு வெடிப்பில் இவருக்குக் காலில் எரிகாயங்கள் ஏற்பட்டன. (இ-எ)

## ஆளும் கட்சியினர் இந்திய எதிர்ப்பை தூண்டி வருகின்றனர்

---- டிக்ஸிற்

கொழும்பு, ஜூன் 9

இந்தியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆளும்கட்சி ஆதரவாளர்கள் தூண்டி வருகின்றனர் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் தெரிவித்திருக்கிறார்.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட இந்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஆளும் கட்சிக்காரர்கள் முழுமூச்சுடன் கலந்து கொண்டனர் என்று இந்திய வானொலி அறிவித்தது.

கொழும்பில் உள்ள இந்தியர்களின் உயிர், உடைமைகளுக்குச்சேதம் ஏற்படாமல் பாதுகாப்பது இலங்கை அரசின் பொறுப்பு என்றும் அப்படி சேதமாக்கப்பட்டால் அதை பாரதூரமான சம்பவமாக இந்தியா கருதும் என்றும் இந்திய அரசு, இலங்கையை ஏற்கனவே எச்சரித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த எச்சரிக்கைக் குறிப்பை இந்தியத் தூதர் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவிடம் கடந்த ஞாயிறு கையளித்தார். (இ-எ)

## கடற்கரைப் பகுதி இராணுவத்திடமாம்

### அரசு உரிமை கோருகிறது

கொழும்பு, ஜூன் 9

வடபகுதியின் மூன்றில் இரண்டு பங்கு கடற்கரைப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

— இப்படி இலங்கை அரசு வட்டாரங்கள் தெரிவித்தன என்று பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி அறிவித்தார்.

இதன் காரணமாக தீவிரவாதிகள் கடல் மூலம் ஆயுதங்கள் பெறுவது தடைப்பட்டிருப்பதாகவும் பி. பி. சிச் செய்தி தெரிவித்தது. (உ-எ)

## ஆக்கிரமிப்பை சமாளிக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது

### ஜெனி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை கேந்திர நிலையமாக இருக்கின்றது. இதன் காரணமாக வேற்று நாடுகளின் ஆக்கிரமிப்பை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

இப்படி நிதி அமைச்சர் ஜெனி டிமெல் தெரிவித்தார்.

[illegible] ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் பிரதேச சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். 1989 இல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாக இத் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

இப்படி அமைச்சர் [illegible] (இ-எ)

## சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு, ஜூன் 9

யாழ். குடாநாட்டின் மீது இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைத் தரையிறக்கியதை ஆட்சேபித்து கொழும்பு ஹல்ஸ்டோப்பில் சட்டத்தரணிகள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சகோதரர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. எச். எல். டி. சில்வா உட்பட சட்டத்தரணிகள் பலர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். (உ)

## அபி. சபையும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 9

இந்தியாவின் விமானங்கள் யாழ். குடாநாட்டில் உணவுப் பொருள்கள் பொதிகளை போட்ட செயலை கொழும்பு மாவட்ட அபிவிருத்திச்சபை கண்டித்து உள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று நேற்று நடந்த சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ-எ)

## உணவுப்பொருள் இன்னும் ராமேஸ்வரத்தில்

மதுரை, ஜூன் 9

யாழ் குடாநாட்டுக்கு படகுகளில் கொண்டு வரப்பட்டு திருப்பிக் கொண்டு போகப்பட்ட உணவுப்பொருள்களை இராமேஸ்வரத்திலேயே தொடர்ந்து வைத்திருக்கும்படி புதுடில்லி உத்தரவிட்டுள்ளது.

இந்த உணவுப் பொருள்களை மதுரைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோதே புதுடில்லியில் இந்த அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## பீரங்கிப் படகுகள் ரோந்து

யாழ்ப்பாணம், ஜூன் 9

மாதகல் கடற்பகுதியில் இருந்து பருத்தித்துறை வரை ஸ்ரீலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகள் ரோந்து சுற்றி வருகின்றன.

அரை மைலுக்கு ஒன்று என்ற வகையில் ரோந்துப்படகுகளின் நடமாட்டம் காணப்படுகின்றது.

படகுகளில் இருந்தே கரையோரப் பகுதிகளை நோக்கி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-10)

## விடுதி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கல்லூரியின் விடுதி மாணவிகள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மாணவிகளின் உறவினர்கள் மாணவிகளைப் பற்றி விசாரித்து தகவல் அறிய முடியாத நிலையில் கவலை அடைந்திருக்கின்றனர். (உ-11)

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

## தெல்லிப்பளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தங்கியுள்ளனர்.

மாவிட்டபுரத்திலிருந்து வீமன்காமம் ஊடாக வந்த இராணுவத்தினர் தெல்லிப்பளை தபால் கந்தோர் வரை வந்து போராளிகளின் எதிர்த் தாக்குதலினால் மீண்டும் மாவிட்டபுரத்திற்கு பின் வாங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-ள-10)

### இன்றைய நிலைமைக்கு

## ஜே. ஆரின் சிறந்த தலைமையே காரணம் என்கிறார் முஹம்மது

கொழும்பு, ஜூன் 9

இன்றுவரை இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு காப்பாற்றப்பட்டுள்ளது என்றால் அதற்குக்காரணம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சிறந்த தலைமையே.

இப்படிச் சொன்னார், போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது.

பலாங்கொடையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

நாம் என்ன செய்ய வேண்டும்; எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை வெளியார் எமக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை- இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

### கொழும்பில்

## இந்திய பிரசைகளுக்கு நெருக்கடி அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 9

இந்திய எதிர்ப்புணர்வு கொழும்பு மாநகரில் அதிகரித்து வருகின்றது.

இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும்பான்மைஇனத்தவர்கள் இந்தியப் பிரசைகளை வெறுப்புணர்வுடன்தான் நடத்துகின்றனராம்.

கட்டுநாயக்கா விமான நிலையம் செல்லும் இந்தியப் பயணிகள் தேவையற்ற கஷ்டங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அவர்கள் எடுத்துச் செல்லும் பொதிகளை பரிசோதனை செய்வதில் காலதாமதம் செய்கின்றார்களாம் சுங்க அதிகாரிகள்.

பால்மா, பிஸ்கட், தேயிலை எல்லாம் இந்தியாவில் இருக்கின்றன.

இவற்றை அங்கு கொண்டு போகவேண்டியது இல்லை என்று கூறி சுங்கப்பகுதியினர்தடுத்து விடுகின்றனராம். (இ-எ)

## இராமேஸ்வரம் மீனவர் பிரச்சினை விரைவில் தீருமாம்

சென்னை, ஜூன் 8

இராமேஸ்வரம் மீனவர் பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்வுகாணும்.

இணை அமைச்சர் ப. சிதம்பரம் மேற்கண்டவாறு சொன்னார்.

இலங்கைக் கடற்படையினரின் அச்சுறுத்தல் காரணமாக ஆயிரக் கணக்கான இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்யாமல் இருந்து வருகின்றார்கள்.

இது குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே இணை அமைச்சர் முன்கண்டவாறு உறுதியளித்தார். (இ-எ)

### பாராட்டு

சென்னை, ஜூன் 8

யாழ். தமிழருக்கு விமானமூலம் உணவுப் பொருள்களை விநியோகம் செய்தமைக்காக இந்திராகாங்கிரஸ் வேலூர் நகரக் கமிட்டி, பிரதமர் ராஜீவ் காந்திக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறது. (இ-எ)

## செஞ்சிலுவை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

னோர் குடாநாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கிறார்கள்.

வடமராட்சியில் இருந்து இருபது மைல் தூரம் நடந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்த சம்பவங்களைக் கேட்டதன் பின்னர் மக்கள் மத்தியில் மேலும் அச்சம் அதிகரித்துள்ளது.

முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட முழுக் குடும்பத்தையுமே அரசாங்க ஆயுதப் படையினர் கொன்றொழித்து இருக்கிறார்கள் என்பதையும் –

இந்த வகையில் நூற்றுக் கணக்கானோர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் - தப்பி வந்தவர்கள் மூலம் அறிய முடிகிறது.

வடமராட்சியில் இப்போது வசிக்கும் மக்கள், நடந்த சம்பவங்களைப் பற்றிய உண்மைகளைக் கூற அஞ்சுகிறார்கள். அங்கு ஆயுதப் படையினர் பெருமளவில் தங்கியிருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

குடா நாட்டுக்குள்ளேயே அகதிகள் பிரச்சினை கட்டுமீறி உள்ளது. அரசாங்க அதிபராலோ அல்லது அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களாலோ அகதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் பிரச்சினைகளைக் கையாள முடியவில்லை.

எனவே இங்குள்ள உண்மை நிலையை அறிவதற்கு உங்களது அவதானிகள் குழு ஒன்று இங்கு வர வேண்டியது மிக அவசியமாகும்.

அத்துடன் போதியளவு நிவாரண உதவிகளை வழங்குமாறும் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

குடா நாட்டில் உணவுப் பொருள்கள், குழந்தைகளுக்கான உணவுகள், துணி வகைகள், மருந்து வகைகள் என்பன பெருமளவில் தேவைப்படுகின்றன.

போரூட், றெட்பானா போன்ற ஸ்தாபனங்கள் ஏழை மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உதவி செய்துவந்த போதிலும் கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் கடந்த மூன்றரை வருடங்களாக யாழ்ப்பாண மக்களுக்கு எவ்வித உதவியும் வழங்கவில்லை.

இத்தனைக்கும் யாழ். செஞ்சிலுவைக் கிளை இங்குள்ள தேவை குறித்து பல தடவைகள் கொழும்பு அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தி இருந்தது.

எனவே இது விடயத்தை அதிக கவனத்திற்கு எடுத்து, செஞ்சிலுவைச் சங்க அவதானிகளை இங்கு அனுப்பி வைப்பதோடு, மக்களை அழிவிலும் கஷ்டத்திலும் இருந்து காப்பாற்றுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நீத்தார் பட்டியல்

### இரத்தினேஸ்வரி சிவகுரு

காலஞ்சென்ற கரம்பனூர் பண்டிதர் (முன்னாள் உதவி அதிபர், கந்தர்மடம் த. க. பாடசாலை), சைவப்புலவர் சிவகுரு (சிவபாக்கியநாதன்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மேலைக்கரம்பன் சிவலிங்கம் கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், வரதனின் (பொறியியலாளர் நீர்வளச்சபை வடபிரதேசம்) அன்புத் தாயாரும், சாலோகதேவியின் (ஆசிரியை, கிறீஸ்தவக் கல்லூரி கோப்பாய்) அன்பு மாமியும், சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் லக்ஷ்மண, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பாட்டியும், காலஞ்சென்ற கணேசன், ஆதிமூர்த்தி, காலஞ்சென்ற குருச்சந்திரன், காலஞ்சென்ற ஜெகசோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமான திருமதி இரத்தினேஸ்வரி சிவகுரு 8-6-87 திங்களன்று காலமானார். மரணச்சடங்குகள் 317A, நாவலர் வீதி இல்லத்தில் அன்றே நடந்தேறியது. உற்றார் உறவினர், அன்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. வரதன்
(1414)

### தி. இராஜசிங்கம்

திரு. தி. இராஜசிங்கம், (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர், தெல்லிப்பழை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், இராஜமனோகரன் (பிறப்பு, இறப்பு பதிவாளர் மல்லாகம்), நித்தியானந்தன் (ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி), Dr தெய்வேந்திரன், (சுகாதார வைத்திய அதிகாரி), அருள்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேசதேவி, Dr செங்கமலம்,(யாழ் வைத்தியசாலை) திரு. கனகரத்தினம், (இலங்கை வங்கி—பிராந்திய முகாமையாளர், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று காலை10 மணியளவில் 36/7 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி இல்லத்திலிருந்து துண்டிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

## அரிசி, கிடாரம்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அதிகாரிகள் இல்லாத நேரம் எமக்கு அடி, உதைக்குக் குறைவிருக்கவில்லை.

கடைசி நாள் எம்மைத் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்தனர்.

பின்னர் புலிகளின் மறைவிடங்களைக் காட்டினால் எம்மை விடுதலை செய்து எமது குடும்பங்களுக்கு உதவுவதாகவும் கூறினர்.

நாம் ஏழைகள். எமக்கு எதுவும் தெரியாது என கூறவே எம்மை 4 ஆம் நாள் விடுதலை செய்தனர்.

இப்படி அவர் கூறினார். (இ-7-160)

## யாழ் நிலை---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழருக்கு, இந்தியாவின் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது பற்றி அக்கறை காட்டாது, தொடர்ந்து இராணுவ நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபடுவது இந்திய அரசின் பலத்த கவனத்தை ஈர்த்துள்ளது.

இப்படி பி. பி. சியின் புதுடில்லி செய்தியாளர் மார்க் ரலி நேற்று அறிவித்தார். (அ-எ-ள)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 09-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday June 09, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org